රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government
ඉංජිනේරු සේවා අංශය, பொறியியல் சேவைப் பிரிவு, Engineering Services Division
නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකා. சுதந்திரச் சதுக்கம் கொழும்பு 07 இலங்கை.
Independence Square, Colombo 07, Sri Lanka.
Website : www.pubad.gov.lk

දුරකතන / தொலைபேசி / Telephone: 011-2696211-13
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2695279
ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail: info@pubad.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: MPA/ESD/14/01/07/2023
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2023.12.04

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண தலைமைச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>பொதுச்சேவைப் பதவிகளுக்கான நியமனங்கள் / பதவி உயர்வுகள் தொடர்பாக சேவைப்பிரமாணக்குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற கல்வி / தொழில் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்களின் செல்லுபடியாகும் தன்மையினை உறுதி செய்தல் - இலங்கை பொறியியல் சேவை</u>**

சேவைப்பிரமாணக் குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள நியமனங்கள்/ பதவி உயர்வுகளின்போது தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக உத்தியோகத்தர்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற கல்வி/தொழில் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்கள், குறித்த பதவியின் நிர்வாக அதிகாரத்தை வகிக்கும் அமைச்சின் செயலாளர்களால், மேற்படி சான்றிதழ்கள் வெளியிடப்பட்ட நிறுவனத்தினாலேயே உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், பொதுச் சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும் என மேற்படி ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரது இலக்கம் PSC/PRO/HB/26/2023 மற்றும் 25.08.2023 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

02. அதன்படி, இலங்கை பொறியியல் சேவையின் விசேட தரத்தில் 01.07.2023 ஆம் திகதிக்கு நிலவும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க எதிர்பார்க்கும் உத்தியோகத்தர்கள் தமது பட்டப்பின்படிப்பு/ பட்டப்பின்படிப்பு டிப்ளோமாச் சான்றிதழ்கள் மற்றும் அவற்றின் விரிவான பெறுபேற்றுக் குறிப்புக்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை உரிய நிறுவனங்களின் மூலம் உறுதிப்படுத்திக்கொள்வதற்கு , 15.12.2023 ஆம் திகதிக்கு முன்னரும், தற்போதைக்கு பட்டப்பின்படிப்பு/ பட்டப்பின்படிப்பு டிப்ளோமாத் தேவையை பூரணப்படுத்தியுள்ள ஏனைய உத்தியோகத்தர்கள் தங்கள் பட்டப்பின்படிப்பு/ பட்டப்பின்படிப்பு டிப்ளோமாச் சான்றிதழ்கள் மற்றும் அவற்றின் விரிவான பெறுபேற்றுக் குறிப்புக்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை மேற்படி நிறுவனங்களின் மூலம் உறுதிப்படுத்திக்கொள்வதற்கு , 31.12.2023 ஆம் திகதிக்கு முன்னரும் பின்வரும் முகவரிக்கு சமர்ப்பிக்குமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பட்டப்பின் படிப்பை/ பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவை தொடர்கின்ற உத்தியோகத்தர்கள், உரிய கற்றல் நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் மேற்படி சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக சமர்ப்பிக்க வேண்டும் என்பதை தயவுடன் வலியுறுத்துகின்றேன்.

பொறியியல் சேவைப் பணிப்பாளர்
பொறியியல் சேவைகள் பிரிவு
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

03. மேலும், இந்த பட்டப்பின்படிப்புகள்/ பட்டப்பின்படிப்பு டிப்ளோமாக்கள் உறுதி செய்யப்படுவதால் மாத்திரம், அது சேவைப்பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பதவி உயர்வுகளுக்காக பூர்த்தி செய்யப்பட வேண்டிய பட்டப்பின் படிப்பின்/ பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவின் விடயப்பரப்புக்களுக்கு பொருத்தமானது என்று பொருள்படாது. அதன்படி, உத்தியோகத்தர் ஒருவரால் பூர்த்தி செய்யப்பட்ட பட்டப்பின் படிப்பு/ பட்டப்பின்படிப்பு டிப்ளோமா, இலங்கை பொறியியல் சேவைப்பிரமாணக்குறிப்பில் "10.3.1 (v) ஆ" இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 09 மாதங்களுக்குக் குறைவடையாத கற்கைநெறிக் காலத்தைக்கொண்ட பொறியியல் துறையில்/ முகாமைத்துவத் துறையில்/ தகவல்தொழிநுட்பத் துறையில்/ வர்த்தக நிர்வாகம் தொடர்பான பட்டப்பின்படிப்பு மட்டும் இதற்கு உரித்தாகின்றது

04. தங்களின் ஒரே பட்டப்பின் படிப்பினை/ பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவினை வெளிநாட்டுப் பல்கலைக்கழகமொன்றில் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் அல்லது தொடர்ந்த பட்டப்பின் படிப்புக்களுள்/ பட்டப்பின்படிப்பு டிப்ளோமாக்களில் சேவைப்பிரமாணக்குறிப்புக்கு பொருத்தமானதாக இருப்பது வெளிநாட்டுப் பல்கலைக்கழகமொன்றில் தொடர்ந்த பட்டப்பின்படிப்பு/ பட்டப்பின்படிப்பு டிப்ளோமா மட்டுமே எனின் அவ் உத்தியோகத்தர்கள் தங்கள் பட்டப்பின் படிப்பை/ பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவை உறுதிசெய்துகொள்வதற்கு அவர்கள் சமர்ப்பிக்கும் சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளுக்கு மேலதிகமாக உரிய பல்கலைக்கழக நிர்வாகத்தை அழைத்து தயாரிக்கப்பட்ட கோரிக்கைக் கடிதமொன்றை சமர்ப்பிக்க வேண்டும். (அதன் படிவம் இணைப்பு I இன் படி உள்ளது.)

05. வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பெறப்பட்ட பட்டப்பின் படிப்புக்கள்/ பட்டப்பின்படிப்பு டிப்ளோமாக்கள் உரிய வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு அல்லது உயர்கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பி உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதனால் அதற்காக ஏதேனும் பணம் வசூலிக்கப்பட்டால், அந்தத் தொகையை செலுத்த வேண்டிய முறை தொடர்பில் உரிய உத்தியோகத்தர்களுக்கு எதிர்காலத்தில் அறிவிக்கப்படும்.

ஒப்பம்./ பி. டபிள்யூ. ராஜபக்ச
மேலதிக செயலாளர் (பொது நிர்வாகம்)
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்குப் பதிலாக

தொலைபேசி / தொலைநகல் : 0112 698268
மின்னஞ்சல் முகவரி : esbpubad@gmail.com

<u>**Annexure I**</u>

<u>**Sample Letter**</u>

(Your Name)
(Address)
(Today's Date)

(Name of Recipient)
(Title)
(Address)

Dear Sir/Madam,

**Verification of Authenticity of Foreign University Degree Certificate of Mr./Ms. ……………. from University of ………………………………………..**

I do hereby authorize the High Commission of Sri Lanka in ……………………. through Foreign Ministry in Sri Lanka to obtain the verification of authenticity of my degree certificate received from the University of ……………………………. (with country)

Thank You.
…………………………………………
Mobile No.: ……………………………

Purpose: Please note that degree certificate is needed for (mention the purpose of getting degree verification)